7. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

பிற்பகல் 12–40

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருமதி விஜயதரணி, உங்களுக்குப் பதில் சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *தெய்வத்தின் துணையோடு தமிழகத்தில் பத்து கோடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, முன்னேற்ற அயராது பாடுபட்டுக்கொண்டிருப்பவரும், சட்டத்தின் ஆட்சி நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் உள்ள மக்கள் அமைதியோடு வாழ்வதற்கும் வித்திட்டு, வெற்றிமேல் வெற்றி பெற்ற வெற்றி திருமகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (குறுக்கீடு)*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2014–2015 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 16–வது மற்றும் 17–வது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். நன்றி.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உங்களைப் பார்த்து யாரும் பயப்படவில்லை, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் வராது. திரு. ஞா. செந்தமிழன், நீங்கள் பேசுங்கள்.*

2015 செப்டம்பர் 25]

***திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்றல் வீசும் பூமி எங்கும் இடைவிடாது ஒலிக்கும் வார்த்தை அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) காலம் தந்த கொடை, வறுமையை ஒழித்து, வளமான தமிழகம் காண வாசல்கள்தோறும் வசந்தம் வீசிட வழிவகுத்தவர் அம்மா! கருணை தந்த கொடை, (மேசையைத் தட்டும் ஒலி) வருங்கால சந்ததிகளும் வாழ்ந்திட வாகை சூடும் திட்டங்கள் தந்திட்டவர் அம்மா! புண்ணிய பூமியிலே, புதுப் பாதையிலே புரட்சிகரமான திட்டங்களால் தாய்த் தமிழகம் முதல் நிலை பெற்றிட, இயல், இசை, நாடகத்தோடு அறிவியலும் சேர்த்து ஆள வந்த கொடை, சரித்திர சாதனைகள் குவிக்கின்ற சாதனைகளின் சிகரம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2014–2015 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 18–வது முதல் 22–வது வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

8. மானியக் கோரிக்கைகள், 2015–2016, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

அ) கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை
(ஆ) கோரிக்கை எண் 37—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(அ) கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015–2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.